செ.வெ.எண்.292

நாள்.31.3.2010

செய்தி வெளியீடு – 31.3.2010

## உடல்நலம் குன்றி சிகிச்சை பெற்று வரும் வளர்தமிழ்ச் செல்வர் திரு.மணவை முஸ்தபா அவர்களின் நூல்கள் நாட்டுடைமை! பத்து இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

அறிவியல் தமிழ் எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்த் தொண்டுகள் ஆற்றி வருகிறார். “மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்”, “கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி” போன்ற இவரது நூல்கள் பரிசுகள் பல பெற்றுள்ளதுடன், தமிழக அரசின் “கலைமாமணி விருது”, “திரு.வி.க.விருது” ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் இரண்டு தொகுதிகள் கொண்ட “அறிவியல் கலைச்சொல் அகராதி” உட்பட பல நூல்களைப் படைத்துத் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்துள்ளார். தற்போது முழுமையாகப் பேசவோ, எழுந்து செயல்படவோ இயலாத நிலையில், உடல்நலம் குன்றியுள்ள திரு.மணவை முஸ்தபா அவர்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு 10.3.2010 அன்று எழுதியுள்ள கடிதத்தில் தமது உடல்நிலை குறித்து எடுத்துரைத்துத் தம் மருத்துவச் செலவிற்குப் பயன்படும் வகையில் தாம் படைத்துள்ள அனைத்து நூல்களையும் நாட்டுடைமையாக்கி, தமக்குப் பரிவுத் தொகை வழங்கி உதவுமாறு கோரியுள்ளார்.

திரு.மணவை முஸ்தபா அவர்களின் கோரிக்கையை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, அவர் ஆற்றியுள்ள மிகச்சிறந்த தமிழ்த் தொண்டுகளைப் போற்றி, சிறப்பு நிகழ்வாக அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி, அவருக்கு பத்து இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (31.3.2010) ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9